**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.131/2021</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகாம்பாள் | கணவர் பெயர் | : | சுந்தர் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 08.10.2025

**P.W. : 1**

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது திருமணத்தை எனது அப்பாதான் செய்துவைத்தார். 2 ஆம் பிரதிவாதி மாரியப்பன் எனது திருமணத்திற்கு வந்திருந்தார். 2012 ஆம் வருடம் வீடு கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சம் 2 ஆம் பிரதிவாதி மாரியப்பன் எனக்கு கொடுத்தாரா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு அருகில் உள்ள இடம்தான் தாவா 2 வது இன சொத்து என்றால் சரிதான்.

இரண்டு சொத்துக்களும் ஒரே தேதியில்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1988 ல் எனது பெயரில் என் வீடு உள்ள இடத்தையும், அதே தேதியில் எனது தாயார் பெரியம்மாள் பெயர் அதற்கு அடுத்த இடத்தையும் வாங்கினார் என்றால் சரிதான். பெரியம்மாள் இறக்கும்வரை எனது வீட்டிற்கருகில் உள்ள இடத்தை பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். பெரியம்மாள் 2 ஆம் பிரதிவாதி மாரியப்பன் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். பெரியம்மாள் 1987 ல் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. எனது அம்மா அந்த விபரத்தை என்னிடம் சொல்லவில்லை. எனக்கு ஒரு இடத்தையும், மாரியப்பனுக்கு உயில் மூலம் ஒரு இடத்தையும் கொடுத்து பாகப்பிரிவினை போல் ஒரு ஏற்பாடு செய்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தாயார் 2016 ல்தான் இறந்தார் என்றால் சரிதான். என் மகன் திருமணத்திற்கு 2 ஆம் பிரதிவாதி ரூ.1,80,000/- கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா 2 வது இன சொத்திற்கு வரி வாய்தா 2 ஆம் பிரதிவாதி பெயருக்கு உள்ளது என்றால் தற்போதுதான் அவர் மாற்றியுள்ளார். அதற்கு முன்பு நான்தான் கட்டி வந்தேன். முன்பு நான் 2 வது இன சொத்திற்கு வரி கட்டியதற்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை. 2 வது இன சொத்திற்கு கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்திற்கான அ பதிவேடு, கணினி பட்டா ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை. கூட்டுப்பட்டாவைப் பொறுத்து வட்டாட்சியரை விசாரித்தால் உண்மை விபரம் தெரியும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரின் அ பதிவேட்டில் எனது தாயார் பெரியம்மாள் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு 1993 – இல் திருமணமானதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 2

வது இன சொத்தைப் பொறுத்து தேங்காய் பறிக்கக்கூடாது என 2 ஆம் பிரதிவாதி புகார் கொடுத்து எங்களிடம் எழுதி வாங்கினார்கள் என்றால் நாங்கள் புகார் கொடுத்து அவரிடம் எழுதி வாங்கினார்கள். இருதரப்பும் வழக்கு முடியும் வரை பிரச்சனை செய்யக்கூடாது என எழுதிவாங்கினார்கள் என்றால் எனது மகனிடம்தான் கேட்கவேண்டும். 1988 ஆம் ஆண்டே எனக்கு தரவேண்டிய சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.